IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.239/2019
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 3.45 p.m.

வா.சா. 1 சாட்சி தவமணி க.பெ.குருசாமி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 23.09.2025 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. பிராது ஆங்கிலத்தில் உள்ளது அதனை படித்து பார்த்துதான் வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் படித்து பார்க்கவில்லை எனக்கு தெரியாது. தாவா வழக்கின் விபரத்தை எந்த பத்தியில் சொத்து விபரம் பற்றி நான் கூறியுள்ளேன் என்றால் தெரியாது. தாவா வழக்கில் யார்யாரை தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சத்யா என்பவரை சேர்த்துள்ளேன்.

2. சத்யாவின் தந்தையை ஏன் வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் அவரும் சத்யாவின் இடம் என்று கூறியதால் சேர்த்துள்ளோம். தாவாச் சொத்தில் சர்வே எண் 49/5A குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்குச் சொத்தை யாரிடம் இருந்து நான் வாங்கினேன் என்றால் பாக்கியம் என்பவரிடமிருந்து வாங்கினேன்.

3. பாக்கியம் என்பவருக்கு எவ்வாறு வழக்குச் சொத்து பாத்தியப்பட்டது என்றால் அவரது பெற்றோர் அவருக்கு வழங்கப்பட்ட சொத்தாகும். மேற்படி பாக்கியத்தின் தாயார் பெயர் என்ன என்றால் தனலட்சுமி ஆகும்.

தாவாச் சொத்து தனலட்சுமிக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண் 49/5Aல் பாக்கியவதியிடம் கிரையம் வாங்குவதற்கு முன்பாக மேற்படி சர்வே எண்ணில் சொத்து கிரையம் வாங்கியுள்ளேனா என்றால் எனது பெயரில் 11 செண்டு கிரையம் வாங்கியுள்ளேன்.

4. மேற்படி 11 செண்டும் சர்வே எண் 49/5Aல் கட்டுப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 2001ம் வருடம் ஆவண எண் 1482/2003ன்படி எனக்கு 11 செண்டு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணமானது தனலட்சுமியிடமிருந்து முத்துலட்சுமி கிரையம் வாங்கிய ஆவணம் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தை தாவா வழக்கில் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் தாக்கல் செய்யவில்லை.

5. நான் கிரையம் வாங்கிய 11 செண்டிற்கான பட்டா வாங்கியுள்ளேனா என்றால் பட்டா வாங்கியுள்ளேன், பட்டா எண் தெரியாது. மேற்படி11 செண்டிற்கு பட்டா வாங்காமல் வாங்கியதாக வழக்கிற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா வழக்குச் சொத்தை எந்த வருடம் வாங்கினேன் என்றால் 2013 ஆகும். ஆவண எண் 8164/2013ன்படி வழக்குச் சொத்தை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

6. தாவாச் சொத்து சர்வே எண் 49/5Aல் 0.14ஏர்ஸ்க்கு செண்டு 35க்கு வழக்குச் சொத்தை கிரையம் எனக்கு கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்குச் சொத்தை பொறுத்த எனது கிரைய ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது அசல் கிரைய ஆவணம் அடமானத்தில்

இருப்பதாகவும், அதனாலேயே நான் இந்நீதிமன்றத்தில் எனது கிரைய ஆவணத்தின் நகலையே தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

7. 2 1/2 செண்டு நிலத்தை நான் அடமானம் வைத்துள்ளதாக எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி எனது கிரைய ஆவணத்தின்படி பிரதிவாதியான சத்யா எனது இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று நான் கூறுகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆன எனது கிரைய ஆவணத்தின்படி பிரதிவாதியான சத்யா சாந்தியிடம்தான் கிரையம் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. எனது கிரைய ஆவணத்திலும் சொத்து விபரத்தில் சாந்தி என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முனியாண்டி என்பவரும் தாவாச் சொத்து புலஎண்ணில் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த பாக்கியவதியின் அம்மா தனலட்சுமி தாவாச் சொத்தை எத்தனை பேருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

9. மேற்படி பாக்கியவதி தாவாச் சொத்தை சாந்திக்கு 16 1/2 செண்டும், முனியாண்டிக்கு 5செண்டும், முத்துலட்சுமிக்கு 11 செண்டும் விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள 32 1/2 செண்டு மட்டும்தான் புலஎண் 49/5Aல் உள்ளது என்றால் சரியல்ல.

10. மேற்படி சர்வே எண் 49/5Aல் பொதுவாக 35 செண்டுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண் 49/5Aஆனது அனைத்து ஆவணங்களிலும் 35 செண்டுதான் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி

வழக்குச் சொத்து சர்வே எண்ணில் என்னைத்தவிர வேறுயாரும் பட்டா வாங்கியுள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது.

11. வழக்குச் சொத்தில் பிரதிவாதியான சத்யா பெயரில் பட்டா எண் 2279 புலஎண் 49/8, 0.2.70 ஏர்ஸ் 5 செண்டு 182 3/4 ச.அ இடத்திற்கு பட்டா வாங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு கிரையம் கொடுத்த 2 1/2 செண்டு பாக்கியவதிக்கு பூர்வீக பாத்தியமா, கிரைய பாத்தியமா என்றால் பாக்கியவதியின் தாயார் சொத்தாகும். தாவாச் சொத்து புலஎண்ணில் உள்ள மொத்த சொத்தும் ஏற்கனவே கிரையம் செய்துவிட்ட நிலையில் எனக்கு எந்தவித சொத்தையும் கிரையம் கொடுப்பதற்கு பாக்கியவதிக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

12. சத்தியா வாங்கிய கிரைய சொத்துக்களும், வாதி வாங்கிய கிரைய சொத்துக்களும் ஒரே ஆவணங்கள் கொண்ட தனலெட்சுமி, முத்துலெட்சுமி, பாக்கியவதி ஆகியோரின் மூலம்தான் வாங்கப்பட்டது என்றால் நான் பாக்கியவதி, முத்துலெட்சுமியிடம் மட்டும்தான் கிரையம் வாங்கியுள்ளேன். ஏன் 11 செண்டுக்கு பட்டா வாங்காமல் 2 1/2 செண்டுக்கு மட்டும் பட்டா வாங்கியுள்ளேன் என்றால் 11 செண்டுக்கு பட்டா வாங்கியுள்ளேன். மேற்படி பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 2 1/2 செண்டுக்கு மட்டும்தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

13. நான் கிரையம் வாங்கிய 11 செண்டுக்கான கிரைய ஆவணத்தின் நான்குமாலில் 2 நபரின் பெயர்கள் மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அப்போது 2 பேர் மட்டும்தான் கிரையம் வாங்கி இருந்தார்கள். மற்றவர்கள் கிரையம் வாங்கவில்லை. சாந்தி தாவா சொத்தில் 16 1/2

செண்டை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் தெரியாது. மேற்படி சாந்தியிடம் இருந்துதான் 1ம் பிரதிவாதி சத்தியா 5 1/2 செண்டும், 6 அடி பாதையும் விடப்பட்டு கிரையம் வாங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

14. நான் பாக்கியவதியிடம் கிரையம் வாங்கிய 2 1/2 செண்டை சர்வேயர் மூலம் அளந்து பார்த்து கிரையம் வாங்கினேனா என்றால் அளந்து பார்த்துதான் கிரையம் வாங்கினேன். மேற்படி அளந்து பார்த்து வாங்கியதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஏனென்றால் மேற்படி கிரையம் வாங்கிய ஆவணத்தை மோசடியாக உற்பத்தி செய்து அதன் படிதான் பட்டா பெற்றுள்ளேன் என்பதால்தான் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

15. நீதிமன்றத்திலிருந்து வழக்கு சொத்தை அளவீடு செய்யும் விதமாக நீதிமன்ற ஆணையரை நியமிக்கவேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் சர்வேயருடன் வழக்கு சொத்தை அளவீடு செய்தார் என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற அறிக்கையில் தாவா சொத்தில் எந்தவிதமான ஆக்கிரமிப்பு இல்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

16. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அளவீடு செய்யும் போது எனது 11 செண்டையும் சேர்த்து அளந்து காட்டினார்களா என்று வழக்கு சொத்தான 2 1/2 செண்டை மட்டும்தான் அளந்து காட்டினார்கள். நான் கிரையம் வாங்கிய வழக்கு சொத்திற்கும் பிரதிவாதியின் கிரைய சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

17. எனக்கு நான் வாங்கிய கிரைய ஆவணத்தின் படி 2 1/2 செண்டு நிலம் எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி எங்கள் இடத்தில் என்ன இடையூறு செய்தார்கள் என்றால் மண், கல் குவித்து வைத்திருந்தார்கள். எனது இடம் இருப்பதால் கட்டாதீர்கள் என்று கூறி நிறுத்தினேன். பிரதிவாதியின் கட்டிடமானது வழக்கு சொத்தில் கட்டப்படவில்லை என்றாலும் எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் கல், மண் குவியல் பிரதிவாதி குவிக்கவில்லை என்றால் சரியல்ல.

18. பிரதிவாதி வீடு கட்டக்கூடாது என்ற எண்ணதில் நான் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குக்காக மாற்றம் செய்துள்ள பட்டாப்படி மற்றும் ஆவணப்படி இடம் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய இடத்திற்கும், மேற்படி சத்தியா வாங்கிய இடத்திற்கும் எத்தனை அடி இடைவேளி இருக்கும் என்றால் ஒட்டிதான் உள்ளது. நான் வாங்கிய 2 1/2 செண்டு இடத்திற்கும், 1ம் பிரதிவாதி இடத்திற்கும் தனித்தனியான பாதையும் தனித்தனியான விஸ்தீரணம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அளந்து பார்த்தால்தான் தெரியும். வழக்கு சொத்தை 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்யாத நிலையில் 1ம் பிரதிவாதியின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

19. 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் எத்தனை அடி ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்றால் சுமார் 1 அடிக்கு மேலாக இருக்கும். 1ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட பாதையில் குவித்த கல், மண்களை வழக்கு சொத்தில் குவித்து ஆக்கிரமிப்பு செய்ததாக தவறாக

கூறுகின்றேன் என்றால் சரியல்ல. என்னுடைய இடம் 1ம் பிரதிவாதி இடத்திற்கு நேர் எதிராக உள்ளதா என்றால் சரியல்ல.

20. மேற்படி சாந்தி என்வர் 1ம் பிரதிவாதிக்கு இடம் கிரையம் செய்த விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. மேற்படி வழக்கில் சத்தியாவை தவீர மற்ற நபர்களை ஏன் சேர்க்கவில்லை என்றால் சத்தியா மட்டும்தான் பிரச்சனை செய்தார், அதனால் அவரை மட்டும் சேர்த்துள்ளேன். அசல் வழக்கில் முத்துலெட்சுமி, தனலெட்சுமி, சாந்தி ஆகியோர்களை சேர்த்தால்தான் இவ்வழக்கில் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரியல்ல.

21. நான் வாங்கிய புல எண்ணும், சாந்தி வாங்கிய புல எண்ணும் இரண்டும் ஒன்று என்பதால் அவர்கள் அவசியமான தரப்பினர்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 4 பட்டா என்பது அசல் வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண். 49/5A ல் உட்பிரிவு செய்து வழங்கப்பட்ட பட்டா என்றால் தெரியாது.

22. மேற்படி வா.சா.ஆ. 4 பட்டாவில் 11.12.2014 ல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 4 ல் உள்ளவாறு மாற்றம் செய்ததற்கு பிறகு வழக்கு சொத்தை எத்தனை முறை அளவீடு செய்தோம் என்றால் நானும் அளந்தேன், 1ம் பிரதிவாதியும் அளந்தார். மேற்படி வா.சா.ஆ4 பெற்றதற்கு பிறகு ஒருமுறை கூட நான் அளவீடு செய்யவில்லை என்றால் சரியல்ல.

23. 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கும்போது அளவீடு செய்து கிரையம் வாங்கியும் பட்டா பெயர் மாற்றம் செய்யும் போது அளவீடு செய்து பட்டா பெயர் மாற்றம் செய்தார் என்றால் தெரியாது. மேற்படி தாவா சொத்தை

உட்பிரிவு செய்யும் போது கிராம புல வரைபடத்தில் மாற்றம் செய்து வரைபடத்தில் அளவீடு செய்யாமல் பட்டாவை பெற்றுள்ளனர் என்றால் சரியல்ல.

24. மேற்படி வழக்கு தாக்கல் செய்த பின்புதான் மேற்கண்ட வழக்கு சொத்தை அளவீடு செய்துள்ளனர் என்றால் சரியல்ல. அதற்கு முன்பு எந்த அளவீடும் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி 1ம் பிரதிவாதியின் இடத்திற்கு அருகில் எனது இடம் உள்ளதா அல்லது சாந்தி இடம் உள்ளதா என்றால் கிழக்கே எனது இடமும், மேற்கே சாந்தி இடமும் உள்ளது. எனது இடத்திற்கும் 1ம் பிரதிவாதி இடத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

25. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் நல்லம்மாள், முத்துலெட்சுமி, பாக்கியவதி ஆகியோர் பெயரில் வழக்கு சொத்து கூட்டுப்பட்டாவாக உள்ள நிலையில் நான் மேற்படி பட்டாதாரர்களில் பாக்கியவதி என்ற ஒரு நபரிடம் மட்டுமே வழக்கு சொத்தை கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கூட்டுப்பட்டாவில் சர்வே எண். 49/5A விஸ்தீரணம் 0.14 ஏர்ஸ் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் தெரியாது.

26. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் உள்ள மற்ற கூட்டுப்பட்டாதரர்களிடம் நான் வழக்கு சொத்தை கிரையம் பெறவில்லை என்றால் பாக்கியவதி பெயரில்தான் பட்டா இருந்தது. பாக்கியவதி பெயரில் பட்டா இருந்தது என்றால் இருந்தது. மேற்படி பாக்கியவதி பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். உண்மையில் மேற்படி பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

27. கூட்டுப்பட்டா அடிப்படையில்தான் எனக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பாக்கியவதிக்கு எந்த பாத்தியமும், உரிமையும் தனிப்பட்டமுறையில் இல்லாத நிலையில் நான் பாக்கியவதியிடம் வாங்கியது செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 ல் உள்ள பட்டாவை எப்போது பாக்கியவதி என்னிடம் கொடுத்தார் என்றால் சுமார் 1 ஆண்டுகளுக்கு உள்ளாக கொடுத்திருப்பார்.

28. நான் கிரையம் பதியும் போது பாக்கியவதி பெயரில் தனிப்பட்டா இல்லை என்றால் எனக்கு தெரியாது. ஏனென்றால் நல்லம்மாள், தனலெட்சுமி ஆகியோர் தாவா சொத்து புல எண். 49/5A ல் உள்ள மொத்த விஸ்தீரணம் 35 சென்டை கிரையம் கொடுத்து முடித்துவிட்டார்கள் என்பதால் தனிப்பட்டா இல்லை என்றால் சரியல்ல.

29. நான் கிரையம் பதிவு செய்யும் போது நல்லம்மாள், தனலெட்சுமி ஆகியோர்கள் சாட்சியாக கையெழுத்து செய்தார்களா என்றால் இல்லை. வா.சா.ஆ. 1 கிரைய ஆவணத்தி உள்ள சாட்சிகளுக்கு கிரைய ஆவணத்தின் சொத்து விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்கண்ட வா.சா.ஆ1 ஆவணத்தை எனது தந்தைதான் மோசடியாக உற்பத்தி செய்து பட்டா பெயர் மாற்றமும் செய்ய முயற்ச்சித்தார் என்றால் சரியல்ல.

30. வழக்கு தாக்கல் செய்யும் போது எனது தந்தை உயிருடன் இருந்தாரா என்றால் இருந்தார். மேற்படி தாவா சொத்தில் கல், மண் போடும் போது அதை யார் தடுத்தது என்றால் எனது தந்தைதான் தடுத்தார். எனது தந்தைக்கும், 1ம் பிரதிவாதியான சத்தியா மற்றும் முத்துக்காமாட்சி ஆகியோர்களின் குடும்பத்திற்கிடையே உள்ள முன்விரோதம் காரணமாக நான் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி

1ம் பிரதிவாதியான சத்தியா அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில்தான் அனுபவம் செய்து எவ்வித ஆக்கிரமிப்பு செய்யாமல் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல.

31. அசல் வழக்கில் நான் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் உண்மையான காரணங்கள் கொண்டு அசல் வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 05.15 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.09.23 10:46:33 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.